**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை.**

முன்னிலை:– **திருமதி. S.ஆனந்தவல்லி,B.A.,B.L.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, அருப்புக்கோட்டை.

2025 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 8 ம் நாள் புதன்கிழமை

இடைநிலை மனு எண். 5/2025

உள்

அசல் வழக்கு எண். 172/2019

ராஜலட்சுமி ...... மனுதாரர்/2 ம் வாதி

**/எதிரிடை/**

ராமமூர்த்தி ...... எதிர்மனுதாரர்/ பிரதிவாதி

இம்மனுவானது கடந்த 26.09.2025 ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு கடந்த 08.10.2025 ம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பு இறுதிவிசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/2 ம் வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.N.சோலைராஜ் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.B.திருப்பதி அவர்கள் முன்னிலையாகியும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கில் இந்நீதிமன்றம் வழங்கிடும் .....

**உத்தரவு**

மனுதாரருக்கு பதிலாக மனுதாரரின் மகன் செந்தில்குமாரை சாட்சியாக விசாரணை செய்ய உத்தரவிட வேண்டி உ.வி.மு.ச பிரிவு 151–ன் கீழ் மனுதாரர்/2 ம் வாதி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர்/2 ம் வாதி தாக்கல் செய்த மனுவின் சுருக்கம்:-**

தாவா 2 வது லக்க சொத்தை பொறுத்து வழக்கு தாக்கல் செய்துள்ளார். தாவா 1 வது லக்க சொத்தை பொறுத்து 1 ம் வாதி வழக்கை நடத்த முன்வரவில்லை. தாவா 2 வது லக்கத்தை பொறுத்து மனுதாரர்/2 ம்வாதி சாட்சியம் அளிப்பதற்காக இன்று வாய்தா போடப்பட்டுள்ளது. மனுதாரர்/2 ம் வாதிக்கு 71 வயதாகிவிட்டது, இரத்த கொதிப்பு,

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S

சர்க்கரை வியாதி, மூட்டுவலி அனைத்தும் உடல் உபாதையுடன் இருந்து வருகின்றனர். மனுதாரர்/2ம் வாதியால் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி சாட்சி சொல்ல முடியாத நிலையில் இருக்கின்றன. மனுதாரர்/2ம்வாதி மகன் செந்தில்குமார் ஆசிரியர் வேலை பார்க்கிறார். அவருக்கு வழக்கு விபரங்கள் அனைத்தும் தெரியும். எனவே மனுதாரர்/2ம் வாதிக்கு பதிலாக தன் மகன் செந்தில்குமாரை சாட்சியாக விசாரிக்க அனுமதி கொடுக்க வேண்டி இம்மனு தாக்கல்.

3. <u>எதிர்மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்த மறுப்புரையின் சுருக்கம்:–</u>

மனுதாரர் தனது அபிடவிட்டில் தனக்கு 71 வயதாகி விட்டது என்றும், இரத்த கொதிப்பு, சர்க்கரை வியாதி, மூட்டுவலி என அனைத்து நோய்களுடன் உள்ளார் என்றும், அதனால் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி சாட்சி சொல்ல முடியாத நிலையில் உள்ளார் என்றும், அதனால் தனக்கு பதிலாக தனது மகன் செந்தில்குமாரை சாட்சியாக விசாரிக்க அனுமதி வேண்டும் என வறியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய். மனுதாரர் நல்ல உடல்நிலையுடன் ஆரோக்கியமாக உள்ளார். நீதிமன்றம் வந்து வந்து சாட்சிள சொல்ல முடியும் தகுதியும் உள்ளது. வழக்கின் உண்மை நிலை மறைக்கவே மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் கூற்று உண்மையாக இருக்குமானால் மருத்துவரின் சான்று பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்து நீதிமன்ற ஆணையர் மூலம் வீட்டிலே சாட்சி சொல்ல தகுந்த அனுமதி பெற சட்டத்தில் வழிவகை உள்ளது. மனுதாரர் கெட்ட எண்ணத்திலேயே மனுத்தாக்கல் செய்துள்ளார்.

4. <u>தீர்வு காணவேண்டிய பிரச்சினை</u> :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா?, இல்லையா? என்பதுதான் தீர்மானிக்கப்பட வேண்டியது ஆகும்.

<u>தீர்வு</u>:–

(5) மனுதாரர்/2ம்வாதி மனு மற்றும் எதிர்மனுதாரரின் மறுப்புரை பரிசீலிக்கப்பட்டது.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S

(6) இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியம் அளிக்கப்படவில்லை. ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

(7) இருதரப்பும் கேட்கப்பட்டது ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. வழக்கு கோப்பை பரிசீலிக்கையில், தாவா 2வது லக்க சொத்தை பொறுத்து வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், தாவா 1வது லக்க சொத்தை பொறுத்து 1ம் வாதி வழக்கை நடத்த முன்வரவில்லை. தாவா 2வது லக்கத்தை பொறுத்து மனுதாரர்/2ம்வாதி சாட்சியம் அளிப்பதற்காக இன்று வாய்தா போடப்பட்டுள்ளது. மனுதாரர்/2ம் வாதிக்கு 71 வயதாகிவிட்டு, இரத்த கொதிப்பு, சர்க்கரை வியாதி, மூட்டுவலி அனைத்தும் உடல் உபாதையுடன் இருந்து வருகின்றனர். மனுதாரர்/2ம் வாதியால் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி சாட்சி சொல்ல முடியாத நிலையில் இருக்கின்றன. மனுதாரர்/2ம்வாதி மகன் செந்தில்குமார் ஆசிரியர் வேலை பார்க்கிறார். அவருக்கு வழக்கு விபரங்கள் அனைத்தும் தெரியும். எனவே மனுதாரர்/2ம் வாதிக்கு பதிலாக தன் மகன் செந்தில்குமாரை சாட்சியாக விசாரிக்க அனுமதி கொடுக்க வேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும் தெரியவருகிறது.

(8) எதிர்மனுதாரர் தரப்பில், மனு கெட்ட எண்ணத்திலேயே தாக்கல் செய்யப்பட்டுள்ளது என எதிர்உரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கீழமை நீதிமன்றங்கள் தரப்பினர்களுக்கு தங்களது வழக்கை நிரூபிக்க போதுமான வாய்ப்பினை கொடுக்க வேண்டும் என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது. எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் இம்மனுவிற்கு பெரிய அளவில் ஆட்சேபனை செய்யப்படவில்லை என்பது தெரியவருகிறது. மனுதாரரின் வயது 71 என்பதும் அவர் மூத்த குடிமகன் என்றும், உடல் உபாதைகள் உள்ளது என்றும் இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது. எனவே, மனுதாரர்/2ம் வாதி தங்களது மனுவில் மனுதாரருக்கு பதிலாக மனுதாரரின் மகன் செந்தில்குமாரை சாட்சியாக விசாரணை செய்ய மனுதாரர்/2ம் வாதிக்கு தரப்பு வழக்கை நிரூபிக்க ஒரு வாய்ப்பு அளிக்கும் பொருட்டு, மனுதாரர்/2ம் வாதிக்கு பதிலாக மனுதாரரின் மகன் செந்தில்குமாரை சாட்சியாக

ANANTHAVALLI S
Digitally signed by ANANTHAVALLI S

விசாரணை செய்ய ஒரு வாய்ப்பு வழங்குவது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

(9) மனுவில் கூறியுள்ள காரணங்கள் ஏற்ககூடியதாக இருப்பதால் வாதி தரப்பு மனுதாரர்/2ம் வாதிக்கு பதிலாக மனுதாரரின்/2ம்வாதியின் மகன் செந்தில்குமாரை சாட்சியாக விசாரணை செய்ய தாக்கல் செய்துள்ள இந்த மனுவை அனுமதிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**இறுதியாக,** இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை குறித்து உத்தரவு இல்லை.

மேற்படி உத்தரவு என்னால் சொல்லப்பட்டு. சுருக்கெழுத்து தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய இன்று 2025ம் ஆண்டு அக்டோபர் மாதம் 8ம் நாள் பகரப்பட்டது.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அருப்புக்கோட்டை.

<u>மனுதாரர்/2ம் வாதி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> :– இல்லை.

<u>எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> :– இல்லை.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அருப்புக்கோட்டை.

-------------------------
முு.மா.உ.நீ. அருப்புக்கோட்டை,
இடைநிலைமனு எண்.5/2025
உள்
அசல்வழக்கு எண்.172/2019

சீரான/வரைவு உத்தரவு
நாள் 08.10.2025
-------------------------